# திருமலைத்தீபம்

THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 18
விலை 20/=

ஆடி இதழ்-2015, ஆரம்பம் 15 மாசி - 2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம் - 18

E-mail- catetcota@gmail.com T.P- 026 2221022, 0263202532


## ஆண்டவரின் குரல் வலிமைமிக்கது (தி.பா 29:4)





# புதிய ஆயரின் சிறப்பிதழ்

## திருகோணமலை மறைமாவட்டத்தின் புதிய ஆயர் நியமனம்

அதி வந்தனைக்குரிய ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஓய்வு பெறும் காரணத்தால் திருத்தந்தையவர்கள் அவருக்குப் பதிலாக திருகோணமலை மறைமாவட்டத்திற்கு புதிய ஆயராக அதி. வண. அருட்பணி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்களை 03.06.2015 அன்று நியமித்-துள்ளார். எமது மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அதி. வண. அருட்பணி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்களின் திருநிலைப்படுத்தல் நிகழ்வு இம்மாதம் 25ம் திகதி காலை 8.30 மணிக்கு திருகோணமலை தூய சூசையப்பர் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் 26.07.2015 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு புதிய ஆயர் (Installation) மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்கும் திருச்சடங்கு தூய மரியாள் பேராலயத்தில் நடைபெறும். எனவே அனைவரும் வருகை தந்து **புதிய ஆயருக்காக செபிப்போம், வாழ்த்துவோம்.**



## மறைமாவட்டத்தின் புதிய ஆயர்

பெற்றோர் : தந்தை - அமரர் ஜோக்கிம் இம்மானுவேல்
தாய் - திருமதி டொனேற்றா மேசி இம்மானுவேல்
பிறப்பிடம் : திருகோணமலை
சகோதரர்கள் : ஐந்து ஆண் சகோதரர்களும், நான்கு பெண் சகோதரிகளும் இவர் நான்காவது புத்திரன்

பெயர் : அருட்பணி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்
பிறப்பு : 25-12-1960
பங்கு : தூய மரியாள் பேராலயம், திருகோணமலை
கல்வி : தூய மரியாள் பாடசாலை, திருகோணமலை
தூய மரியாள் பாடசாலை, புத்தளம்
தூய சூசையப்பர் கல்லூரி, திருகோணமலை
சிறிய குருமடம் : 1975-1978 தூய சூசையப்பர் சிறிய குருமடம், திருகோணமலை
பெரிய குருமடம் : 1978-1981 மெய்யியல் - தேசிய குருமடம், கண்டி

இடைநிலை பயிற்சி: 1981 - 1982
இறையியல் : 1982 - 1983 தேசிய குருமடம், கண்டி, 1983-1986 தூய பவுல் குருமடம், திருச்சி, இந்தியா
திருத்தொண்டர் பட்டம்: 12. 04. 1985.
குருத்துவம் : 21.05.1986 தூய மரியாள் பேராலயம்

பணி:
**ஆனி 1986 - ஆவணி 1988** உதவி பங்குத் தந்தை, தூய மரியாள் இணைப் பேராலயம், மட்டக்களப்பு
**ஆவணி 1988 - தை 1989** - பங்குத்தந்தை, இருதயபுரம், மட்டக்களப்பு
**தை 1989 - ஆனி 1993** - பங்குத்தந்தை அக்கரைப்பற்று
**ஆனி 1993 - ஆடி 1999** - இயக்குனர், மறைமாவட்ட விவிலிய, திருவழிபாட்டு, மறைக்கல்விப் பணி, மட்டக்களப்பு
**புரட்டாதி 1995 - ஆடி 1999** - பங்குத்தந்தை, ஆயித்தியமலை, மட்டக்களப்பு
**புரட்டாதி 1999 - ஆடி 2001**- உயர்கல்வி, உரோமை, இத்தாலி
**வைகாசி 2001 - ஆடி 2011** - விரிவுரையாளர், தேசிய குருமடம், கண்டி
**வைகாசி 2011 - இன்றுவரை** - ஆயரின் பிரதிநிதி, திருகோணமலை மறைமாவட்டம்
**ஆடி 2012 - இன்றுவரை** - மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர்

**கல்வித் தகைமைகள்:** B.Ph., B.Th. (உரோமை)
STL, ஒழுக்கவியல், (உரோமை)

☞ தொடர்ச்சி 6ம் பக்கம்





## திருகோணமலை மறைமாவட்ட

## புதிய ஆயருடனான நேர்காணல்

நேர்கண்டவர்: அருட்பணி. B. ரொபின்சன் போல்

*நீங்கள் ஒரு மறைமாவட்டத்தின் ஆயராய் வருவீர்கள் என எதிர்பார்த்ததுண்டா?*

☞ ஆம்.

இயல்பாகவே யாருக்கும் வரக்கூடிய நிலை இது. அதுவும் எமது மறைமாவட்டத்திலிருந்து ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட முன்மொழியப்பட்ட சிலருள் எனது பெயரும் இருந்தது. எனவே எனக்கு சந்தர்ப்பம் இருக்கலாம் எனும் எதிர்பார்ப்பு இயல்பானதே. ஆனாலும் "ஒருவர் ஆயர் நிலைக்கு உயர்த்தப்பட்டால்தான் இறைபணியாற்றலாம்" என்றில்லை. இது எனது உறுதியான கருத்து. எனவே எந்நிலையிலும் எனது இறைபணி தொடர்ந்திருக்கும், மிகவும் வெளிப்படையாகவே பதிலளித்தீர்கள் - நன்றி.

*நமது மறைமாவட்டம் பலசமய, பலஇன மக்களை உள்ளடக்கியதாயுள்ளது. இவ்வாறான சூழலில் தங்களின் அணுகுமுறை எவ்வாறாக அமையும் என அறிய விரும்புகிறோம்?*

☞ பல் சமய, பல் இன மக்களிடையே எம் பணி தொடரவேண்டும். இதற்காக அமையக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் நாம் பயன்படுத்த வேண்டும். மேலும் ஒப்புரவுக்கான வழிகளையும் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோல மாணவர்களின் கல்வியை உயர்த்துவதன் மூலமும், திருச்சபையின் சமூகப் பணிகளை விஸ்தரிப்பதன் மூலமும் இனங்களுக்கிடையே வளர்ச்சியையும் ஒற்றுமையையும் உருவாக்கலாம் என நம்புகின்றேன்.

தொடர்ச்சி 4ம் பக்கம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

மீண்டும் உங்களோடு பேசக்கிடைத்த வாய்ப்பு எனக்குப் பெருமகிழ்வே இம் மாதத்திலே பலமுக்கிய நிகழ்வுகள் இடம் பெறக்காத்திருக்கின்றது.

ஆனால் நம்மைப் பொறுத்தவரையில் நமது மறைமாவட்டத்திற்கென புதிதாக நியமிக்கப்பட்டிருக்கின்ற ஆயரைப் பற்றியதே நமது திருமலைமறைமாவட்டத்திற்கு ஆயராக மேன்மைமிகு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் ஆயராக நியமிக்கப்பட்டிருப்பது அனைத்து மக்களுக்கும் பெருமகிழ்வான செய்தியாகும்.

புதிய ஆயரின் பட்டமளிப்பானது இம்மாதம் 25ம் திகதி இடம் பெறுவதற்கான பாரிய ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. புதிய ஆயரின் புதிய நிர்வாகம், புதிய ஆயரிடம் மக்களின் எதிர்பார்ப்புகள், இப்படியாகப் பல கோணங்களிலே பல நிலைகளிலே செய்திகள் நிறைந்துள்ளன எது எப்படி என்றாலும் புதிய ஆயரின் வழிகளிலே திருமலை மறைமாநிலம் நிறைந்த வெற்றிகளைக் காணும், காண வேண்டும் என வாயார வாழ்த்துகின்றோம்.

இம்மாத இறுதியிலே தூய இக்னேசியஸ் லோயலாவுடைய தினத்தை சிறப்பிக்கின்றோம். அதே போன்று சுதேச குருக்களின் தினத்தையும் கொண்டாடுகின்றோம். இறைவனின் பணிவாழ்வு உண்மையான நிலைகளிலே வளர்ந்தோங்க வாழ்த்துகின்றோம். மேலும் இம்மாதத்திலே தூய கார்மேல் அன்னையின் விழாவையும் கொண்டாடுகின்றோம். நமக்கும் நம் நாட்டிற்கும் அன்னையின் ஆசீர் நிறைவாகக் கிடைக்க வேண்டி நிற்போம்.

நாட்டின் அரசியலைப் பார்க்கும் போது நாளுக்கு நாள் கோஷங்கள் ஓங்கியவண்ணம் இருக்கின்றன. பாராளுமன்றக் கலைப்பு, பொதுத்தேர்தல், புதிய தேர்தல்முறை என்றும் இன்னும் இதற்கு மேலாகவும் பேசப்பட்ட வண்ணம் இருக்கின்றன. எப்படி என்றாலும் சிறுபான்மையினரின் பிரதி நிதித்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதில் சிறுபான்மை இனத்தவர்களின் தலைமைகள் மிகவும் உறுதிப்பாட்டுடன் செயற்படுவதை உணர முடிகின்றது.

நாட்டிலே நல்லாட்சி வேண்டும் மக்களின் பணிகளை மேலெனக்கொண்டு செயற்பட பொருத்தமானவர்கள் பாராளுமன்றத்திற்கு தெரிவாக வேண்டும் மக்களின் மனங்கள் மகிழ, நாட்டிலே அமைதியும், சமாதானமும், ஒற்றுமையும் விளங்க, நல்லாட்சி மலர்ந்தோங்க வாழ்த்துவதோடு அனைத்திற்கும் இறைவன் துணைபுரிய வேண்டி மீண்டும் உங்களோடு பேசுவேன் என கூறி நிற்கின்றேன்.

## மரமொன்றின் கதையொன்று

அருட்பணி N.C அருள்வரதன்

### கவிதையின் சரியான வடிவம்

பசுமைகள் நிறைந்த நிலைகளிலே
பார்ப்போர் கண்களை ஈர்ந்து நின்று
கிளைகளில் நிறைந்த கனிகளுடன்
தேடி வருவோர் மகிழ்வு கொள்ள
திருப்தியாய் உண்ணக் கொடுத்த மரம்
வாடிப்போயது வரண்டு இன்று
பட்டுப்போயது நிற்கையிலே
எட்டிப்பார்க்கவும் யாருமில்லையே
ஏங்கியே தனிமையில் நிற்கிறதே
பட்ட மரங்களின் கதைகள்தான் இவை

**பங்குபற்றியவர்கள் - 33 பேர்**
**சரியாக வடிவமைத்தவர்கள் - 07 பேர்**
**அதிஷ்டசாலிகளாக குலுக்கலில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்**

| 1ம் பரிசு 500/= | 2ம் பரிசு 300/= | 3ம் பரிசு 200/= |
|---|---|---|
| செ. நிமல் ராஜ் | புளோரிடா ஜேசுதாஸ் | ரமேஷ் கிறேஷ்மா |
| 37/2 நீதிமன்ற வீதி | 37/2 நீதிமன்ற வீதி | 39 இலிங்கநகர் |
| திருகோணமலை | திருகோணமலை | திருகோணமலை. |

## பாராட்டுக்குரியவர்கள்

1. மனோஜ்குமார் க.ஃபினா — பேராலயம்
2. அனிற்றா ரூஸ்வெல்ட் — பேராலயம்
3. N. லிரோன்ஸ் — பேராலயம்
4. தே. சமில்டன் — நிலாவெளி

பங்குபற்றியஅனைவருக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும்

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## திருகோணமலை மறைமாவட்டப் பெந்தகோஸ்தே பெருவிழா 2015

23. 05. 2015 அன்று மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 11.30 மணிவரை குவாடலூப்பே பங்கில் நடைபெற்றது இவ் ஆராதனையை அருட்தந்தையர்களான B. போல்ரொபின்சன், S. டக்ளஸ் ஜேம்ஸ், A. ரொகான் பேனாட், யூட்ஜோன்சன், S. மதுராங்கன் குரூஸ் ஆகியோர் வழிநடத்தினர்.
இந்த ஆராதனையை குருமுதல்வர் ரி. கிங்ஸ்லி றொபட் அடிகளாரின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டு. திருப்பலியுடன் முடிவுபெற்றது. குவாடலுப்பே பங்குதந்தை S. சுகுனேநதிரன் குரூஸ் பல ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார் அவருக்கு எமது விஷேட நன்றிகள்.

தகவல் அருங்கொடைப் பணியகம்
திருகோணமலை

## மடுத்திருத்தலத்தில் இனங்களுக்கான நல்லிணக்க திருவிழிப்புத் தியானம்

கடந்த 30. 05. 2015 அன்று மடுத்திருத்தலத்தில் இனங்களுக்கான நல்லிணக்க திருவழிப்புத் தியான வழிபாட்டில் கலந்து கொண்ட உவர்மலை, இலிங்கநகர் பங்கு மக்கள் மன்னார் தோட்டவெளி வேதசாட்சிகள் ஆலயத்திலும், பேசாலை அடைக்கலமாதா ஆலயத்தினைத் தரிசித்து பங்குத் தந்தை அருட்பணி இ. யூட்சர்வானந்தன் அவர்களுடன் புகைபடத்தில் இருப்பதையும் இறுதிப் பக்கத்தில் காணலாம்.

தகவல் C.T சௌந்தரதாஸ்
தூய யோசேப்வாஸ் மூப்பர் அமைப்பு
இலிங்கநகர், திருகோணமலை

## பாலையூற்றுப் பங்கிற்கு புதிய உதவிப் பங்குத்தந்தை

05. 06. 2015 அன்று பாலையூற்று திருத்தலத்திற்கு இந்திய நாட்டிலிருந்து கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்தந்தை C. அன்ரனி ஆரோக்கிய சாமி Ofm. Cap அவர்கள் உதவிப் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு இரண்டு மாதங்களே ஆகின்றன. 07. 06. 2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 05.00 மணி திருப்பலியில் பங்குத்தந்தை பங்கு மக்களால் வரவேற்கப்பட்டார்.

## அறிந்த குருவும் அறிந்திராத குருவும்

**அருட்பணி சவிரி விக்ரன் அவிதப்பர் அடிகளார்**

**அருட்பணி சீ. றோ. ஜெயரெத்தினம்**

**'இந்த நாளும் இந்த வாரமும் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்நாளாக அமையவும் உங்கள் நல்ல முயற்சிகள் வெற்றி பெறவும் இறையாசீர் உண்டாகுக'** இதுதான் எப்போதும் அருட்பணி அவிதப்பரின் திருப்பலியின் இறுதி ஆசீர்வாதமாக இருக்கும். அன்றாட வாழ்வின் சுமைகளோடும் சோகங்களோடும் இறைவனை நாடி வருவோர் திருப்பலி முடிந்து செல்லும் போது இவ்வாறு தான் மன ஆறுதல் பெற்றார்கள்.

இருபத்து ஏழு வருடங்களாகத் தன் புன்சிரிப்பாலும் ஆழமான அன்பினாலும் எத்தனையோ நெஞ்சங்களைத் தொட்டுச் சென்றவர் தான் **அருட்பணி சவிரி விக்ரன் அவிதப்பர்** இவர் பிறப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்பு தம் தந்தையைப் பறிகொடுத்திருந்தார். 17.06.1959ல் பிறந்த இவர் வீட்டுக்கு ஒரே மகன். சூசையை இழந்த மரியாள் போலவே இவரது தாயார் அக்னஸ் இவரை ஒரு நன்மகனாகவே வளர்த்தார். கணவனை இழந்து தம் ஒரேயொரு மகனையும் கடவுளுக்காகக் கையளிக்க அத்தாய் தீர்மானித்தார். குருமடம் சென்ற ஆவிதப்பர் ஆரம்பக் கல்வியை யாழ் புனித மார்டின் குருமடத்தில் முடித்துப் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத்துறை தூய சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் முதலாவது அணியில் தன்னை இணைத்துக் கொண்டார். தம் கல்வியைச் செவ்வனே முடித்த இவர் இக்குருமடத்தின் வரலாற்றிலே இரண்டு இடங்களில் தன் பெயரைப் பதித்துச் சென்றார். இக்குருமடத்தின் முதலாவது அணியின் முதலாவது மாணவர் இவரே ஆவார்.

அதேபோல இக்குருமடத்தில் கல்வி கற்றுள்ளவர்களில் முதலாவதாகத் திருநிலைப்படுத்தப்பட்டவரும் இவரே ஆவார். அதே போல இக்குருமடத்தில் கல்வி கற்றவர்களில் முதலாவதாகத் திருநிலைப்படுத்தப்பட்டவரும் இவரே ஆவார்.

மன்னாரின் நானாட்டான் பங்கின் பிச்சைக்குளம் என்ற ஊரில் பிறந்த இவர் பின் நாட்களில் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களிலே உதவிப் பங்குத்தந்தையாகவும் [illegible]

அடிகளின் வாழ்வில் நான் கண்ட சில நல்ல, சிறப்பான விடயங்களை இந்த இடத்திலே நான் பகிர்ந்து கொள்கிறேன்.

எளிமை என்பது அடிகளாரின் தனிப்பண்பு. வெளிநாடு சென்று வருவோரின் வாழ்க்கை மேற்கத்தைய நாகரீகத்துக்கு ஏற்றபடி மாறி விடும்போதும் அடிகளார் மன்னாருக்குத் திரும்ப வந்தும் இறுதிவரை மன்னார் மக்களின் மைந்தனாக எளிமையான ஒரு குருவாகவே வாழ்ந்தார். என்ன தேவையோடு யார் வந்தாலும், முகமலர்ச்சியோடு அவர்களை வரவேற்று, அவர்களது தேவைகளை நிறைவேற்றும் தயாள குணம் படைத்தவர் அவர்.

தந்தையின் முகத்தைக் காணாமலே பிறந்த அவர் எனக்கும் என்போன்ற எத்தனையோ பேருக்கும் ஒரு நல்ல தந்தையாக இருந்தார். தம் மந்தையைப் பெயர் சொல்லி அழைக்கும் ஒரு நல்ல ஆயனாக வாழ்ந்தார். அவரது பணி வாழ்வில் அவர் சந்தித்த சவால்கள் ஏராளம். எனினும் மடுமாதா பால் அவர் கொண்டிருந்த ஆழமான பக்தி அவரை எல்லா இடர், துன்பங்களிலிருந்தும் அவரைக் காப்பாற்றியது.

உள்நாட்டு யுத்தம் உக்கிரமாய் நடந்த காலப்பகுதியில் அவர் ஓமந்தைப் பங்கில் பணியாற்றினார். அவற்றில் இளமருதங்குளம் பங்குமனை திடீரெனத் தீப்பிடித்துக் கொண்ட போது எவ்விதத் தீங்குமின்றி இவர் காப்பாற்றப்பட்டார். இது மடு அன்னையின் பராமரிப்பே என்பதில் சந்தேகமில்லை. அதனால் தான் மடுத் திருப்பதியில் நடக்கும் ஒவ்வொரு திருவிழாக்களிலும் அடிகளைக் காணக் கூடியதாக இருக்கும்.

அண்மையில் கண்ணில் ஏற்பட்ட வலி காரணமாக மருத்துவப் பரிசோதனைக்காகக் கண்டி சென்ற வேளை அவர் மூளையில் ஏற்பட்ட குருதிப் போக்கினால் ( Brain Haemorrhage ) 22.06.2015 அன்று சடுதி மரணத்தைத் தழுவிக் கொண்டார்.

ஒருவரின் மரணத்தில் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன. அடிகளாரின் இறுதிச் சடங்கு 24.06.2015 அன்று மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்ற போது அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளமும், குருக்கள், துறவியரின் திரளும் அவர் எப்படிப்பட்ட ஒரு மனிதராக வாழ்ந்தார் என்று தெளிவாக எடுத்துக் காட்டியது.

ஒரு குருவின் மறைவிற்குச் சக குருக்கள் கண்ணீர் சிந்தி அழுத காட்சி மனதைத் தொடுவதாக அமைந்திருந்தது. முக்கியமாகச் சில காலம் உதவிப் பங்குத்தந்தையாக இருந்த அருட்பணி பிரதீப் (பதுளை மறைமாவட்டம்) மொழியால் சிங்களவராக இருந்தாலும் தந்தையை இழந்த சோகத்தில் அழுத காட்சி எங்களையும் அழ வைத்தது.

தொடரும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஆயருக்கு வாழ்த்துக்கள்

அருட்பணி N.C அருள்வரதன்

தேனெனவே செய்தியொன்று
தொனித்து அது ஒலிக்கிறது
காதினிக்கும் செய்தியது
காதுகளில் கேட்டதமே
வானெனவே உயர்ந்தபெரு
மகிழ்வதனால் நிறைவு கொண்ட
மக்களின் மனமகிழ்வைக் காணுவோமே

திருமலை மறைமாநிலத்தின்
புதிதாக ஆயராகத் திருத்தந்தையால்
நியமிக்கப்பட்ட எங்கள் மேலான
பணியாளர் நோயல் இம்மானுவேல் அடிகளார்
தெரிவான செய்தி கேட்டு மக்கள்
ஆனந்தம் பொங்கியே நின்றார்களே

இறைபணியே தன்பணியாய் ஏற்றங்கள்
மறைபணிகள் ஆற்றிவரும் அடிகளிவர்
புதுப்பணியின் ஆயராகப் பொறுப்பேற்று
நிறைந்த நற்பணிகளிவர் காலத்தில்
இறைதுணையே பெரிதெனவே கொண்டு எங்கள்
மேதகு ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை
வெற்றிகளைக் கண்டிட வாழ்த்துவோமே.

## நான் இரசித்த திருத்தந்தை



ஆண்டவரை எதிர்நோக்காகவும்
தன் வாழ்வை பிறர்வாழ்வாகவும்
வாழ்வில் விழுமியங்களானவரே - இன்று
கனிவான பேச்சும் ஈரமான பார்வைகளும்
நாள்தோறும் சிந்திக்க வைத்தது
தாகமான ஆன்மீகமும் நிதானமான வார்த்தைகளும்
இறைவனை அறிய ஆசைதனை தூண்டியதே
விவேகமான சிந்தனையும் தெளிவான முடிவுகளும்
தவறிலிருந்து மீள கற்றுக்கொடுத்ததே
ஆழமான நற்செய்தியும் காரமான தொலைநோக்குகளும்
பலருடன் உறவாட துணை நின்றதே
மென்மையான புன்னகையும் அமைதியான சிரிப்பும்
கோபத்தை தொலைக்க வழி தந்ததே
எளிமையான வாழ்வும் வளமான ஆசீரும்
வாழ்விற்கு ஏணியாக வளம் தந்ததே
பிறர் அன்பில் தாகம் கொண்டவரே
உணர்வுகளின் உறவாகிய - நீர்
இம்மண்ணில் மனிதம் தளிர்த்திட
இனமதமின்றி மானிடரின்
மனங்களை கொள்ளை கொண்டவரே
உம் வரவில் கலந்திட்ட பணியோ - இல்லை
திருச்சபையின் வளர்ச்சியோ - நீர்
இறைவன் தந்த தாலந்தோ இன்று
எம் தந்தை பிரான்சிஸ் நீரல்லவோ இன்று.

-K.S-

## குட்டிக் கதை

Fr.NC

வகுப்பொன்று நடைபெறுகிறது. கற்பித்துக் கொண்டிருந்த ஆசிரியர் கேள்வி ஒன்றைப் போட்டார். மாணவர்களே ஒரு கடிகாரம், அக்கடிகாரம் ஒரு நாளுக்கு இரண்டு முறைகள் மட்டும் சரியான நேரத்தைக் காட்டும். இது என்ன கடிகாரம்? சொல்லுங்கள் பார்ப்போம். பல விடைகள் வந்த வண்ணம் இருக்கின்றன. எல்லாமே பிழையான பதில்கள். கடைசியாக ஒரு மாணவன் சொன்னான், **'சேர் அது ஓட்ட மணிக்கூடு ஓடல்ல சரியா' 'ஆசிரியர் சொன்னார் சரியான பதில்'** என்று சரியான பதில் தானே. நீங்களும் என்ன சொல்றீங்க!

**வாசகர்களே!**

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :-
ஆசிரியர்
திருமலைத் தீபம்
297, டொக்கியார் வீதி, திருகோணமலை.

## உள்ளத்தின் நிறைவே வாய் பேசும்

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதில்
மார்கழி இருபத்தைந்தில்
நான்காவது புதல்வனாய் மலர்ந்து
நோயல் இம்மானுவேல் பெயரும் கொண்டீர்

துள்ளித்திரியும் காலமும் வந்ததும்
தூய மரியாள் கல்லூரியிலே
ஆரம்பக்கல்வியும் கற்று ~ நாளும்
கிறிஸ்தவ விழுமியங்களுடன் வாழ்ந்தீர்

சிறகுவிரியென குருமடத்தில் கால்பதித்து
திரண்டோடி பெருவெள்ளமானீர்
பேராலயத்தின் முதல் குருவாக
தடம்புரளாத பணிவாழ்வில் அர்ப்பணமானீரே

அழைப்பின் வாழ்வுதனை ஏற்று
நல் நண்பனாய் ஆலோசகனாய்
உறவுகளில் கலந்திட்ட மனிதனானீர்
மறைமாவட்ட மறைக்கல்விக்கும்
நல் இயக்குனரும் ஆனீர்

உரோமையில் உயர்கல்வியும் கற்று
குருமடத்தில் நல் விரிவுரையாளராகி
வெட்டாப்பிற்கும் தாகத்திற்கும் ஆசானாகி
முயற்சிகளையும் வெற்றியாக்கினீர்

இலைமறைகாயாய் எளியவர் வாழ்வில்
கல்விக்கு ஒளியானீர் ~ பண்பான
வார்த்தைகளாலும் பணிவான வாழ்வினாலும்
எம் வாழ்வில் நிழலானீர்

சிற்றெழுத்தாய் மக்களின் மனங்களில் ~ அன்று
சீர்பெற்ற காவியமானீர் இன்று
திருமலையில் ஆயரின் பிரதிநிதியாய்
பெரும் நிதிப்பொறுப்பாளரும் நீரானீர்

திருமலையின் முதல் ஆயரும்
உமக்குரியது என்பது பெருமிதமே
பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும் என்பர்
திருமலை மண்ணின் பிறந்த மாந்தருக்கும்
பெருமகிழ்ச்சியும் பெருமையுமானீர்

K. சுபாஷினி
பாலையூற்று

## மறைமாவட்டப் பாதுகாவலர் தூய லொயலா இஞ்ஞாசியார். யே.ச.

அருட்பணி ஆஞ்சலோ பொன்னையா. யே.ச.



**"எல்லாம் இறைவனின் அதிஉன்னத மகிமைக்கே, எல்லாம் மனிதனின் மேம்பாட்டிற்கே"** என்பது தூய இஞ்ஞாசியாரின் விருதுவாக்காக இருந்தது. எங்கும் எதிலும் எப்பொழுதும் இறைவனைக் காண்பதும், இறைவனில் அனைத்தையும் காண்பதுமே அவரின் ஆன்மீகத்தின் சாராம்சம் ஆகும்.

பாலகப் பருவம்: தூய செபஸ்தியானோ என்னும் ஆலயத்தில் பங்குத் தந்தையாக இருந்த அருட்தந்தை சபல்பா "இனிகோ" என்னும் இனிய நாமத்தைச் சூட்டி திருமுழுக்குக் கொடுத்தார். இனிகோ என்றால் "நெருப்பு" என்பது பொருள். இனிகோ பச்சிளம் பாலகனாக இருக்கும் பொழுதே அவரது அன்பு அன்னை இறையடி சேர்ந்துவிட்டார். லொயலா வீட்டிலே பணிப்பெண்ணாகப் பணிபுரிந்தவள் மரியாகத்தரின். இவர் கணவன் லொயலா அரண்மனையிலே தச்சுவேலை செய்த ஏராஸ்டி என்பவருடைய மனைவி. இவர்தான் இனிகோவிற்கு பாலூட்டி வளர்த்தவள். பணிப்பெண்ணின் பிள்ளைகளோடு உறவாடி, விளையாடி வளர்ந்ததால் ஏழைகளின் இன்னல்களில் இடர்பாடுகள், வாழ்க்கை முறை என்பவற்றை நன்கு உணர்ந்திருந்தார். செல்வம் கொழிக்கும் குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆதலால் பாடசாலை செல்லவில்லை. ஆசிரியர்களே வீட்டிற்கு வந்து எழுதப்படிக்கக் கற்றுக் கொடுத்தனர்.

**இளவல் இனிகோ:**
அழகும், பொலிவும், அறிவும் ஒருங்கமையப் பெற்ற இளவல் இனிகோ குதிரை சவாரி, குத்துச் சண்டை, வாள்வீச்சு போன்ற வித்தைகளைக் கற்று சகலகலா வல்லவனாக விளங்கினார். தனது 16வது வயதிலே பேரரசர் பேர்டினந்து பேரரசி இசபெல்லா இவர்களின் மாளிகையில் பகட்டான பட்டாடை உடுத்தி பணிவிடை புரிந்தார். தனது 24வது பிராயத்திலே போர்வீரனாக மாறினார். தந்தை, சகோதரர்கள் வழிநின்று தன் நாட்டிற்கும் பேரரசனிற்கும் போர் புரிய வேண்டியது தனது தலையாய கடமை என்பதை உணர்ந்தார் போலும். உள்நாட்டிலே அடிக்கடி தலைதூக்கிய சிறுசிறு பூசல்களை அடக்கி ஒடுக்க போர்களில் ஈடுபட்டு அவற்றில் வெற்றியும் பெற்றார். போர்க்களத்திலே பெற்ற அனுபவங்கள் தன்னை இறைவனின் போர்வீரனாக இயேசு சபையின் தளபதியாக மாற்றப் போகிறது என்பதை அவ்வேளை அவர் உணராதிருந்திருக்கலாம்.

போர்வீரனாக வேண்டும் என்ற வேட்கையோடு அவரிடம் சிலதீய குணங்களும் குடி கொண்டிருந்தன. துடிதுடிப்புள்ள இளம் வயதில் மதுபானம் அருந்துதல், சூதாட்டம், பெண்களை இம்சை பண்ணல் போன்ற களியாட்டங்கள் வீணான செயல்கள் இவற்றில் சிலவாகும். வீரதீரச் சாகசங்களைப் புரிந்து பேரும்புகழும் மிக்க ஒருபெரும் புள்ளியாக விளங்க வேண்டும் என்ற சவால் அவரது உள்ளத்தில் எழுந்திருக்க வேண்டும். இளம் பெண்களைக் கவரக்கூடியவகையில் ஆடை ஆபரணங்கள் அணிவதும் முடியினை அலங்காரம் செய்து கொள்வதும் காதல் கதைகளையும் வீரதீரச் செயல்களை விளக்கும் நூல்களைப் பெரிதும் விரும்பிப் படிப்பதும் இவரது பொழுது போக்காக இருந்தது.

**எதிரிப்படையாளரையும் கவர்ந்த இளந்தளபதி**
ஸ்பானியதேசமும் பிரான்சு தேசமும் அண்டைய நாடுகள். அடிக்கடி இவ்விரு நாட்டிற்கும் இடையே எல்லைப் பிரச்சினைகள் உருவாவது உண்டு. ஸ்பானிய தேசத்தில் உள்ள "நவாரே" (புனிதபிரான்சிஸ் சவேரியாரின் சொந்த ஊர்) என்னும் இடத்தில் "பம்பலோனா" என்னும் கோட்டை ஒன்று உள்ளது இக் கோட்டையைக் கைப்பற்றும் நோக்கோடு 1521ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 20ம் நாள் பிரஞ்சுப் படையினர் ஸ்பானிய தேசத்தை நோக்கிப் படை எடுத்தனர்.

ஏறக்குறைய 13000 படைவீரர்களைக் கொண்ட எதிர்ப்படையை எதிர்கொள்ள ஸ்பானியப் படைவீரர்கள் ஆயிரம் பேர் மாத்திரமே இருந்தனர். எதிரிகளின் படைப்பலத்தை உணர்ந்த ஸ்பானியவீரர்கள் எதிரியிடம் சரணடைவதே மேல் என்று தீர்மானித்தனர். ஆனால் இனிகோவோ "சரணடைவது அவமானம் புறம்காட்டி ஓடுவதை விட சாவதேமேல்" என்று ஆணித்தரமாக வாதாடியதுடன் போருக்கு செல்வதே கண்ணியம் என்று சொல்லி படைத்தளபதிகளைத் தூண்டி உற்சாகமளித்து அவரது கருத்துக்கு இசைவு கொடுக்க வைத்தார்.

மும்முரமாக நடைபெற்ற யுத்தத்தில் ஸ்பானிய வீரர்கள் பலர் கொல்லப்பட்டனர். சிலர் புறங்காட்டி ஓடினர் மனந்தளராது தன்னந் தனியாக நின்று வீரத்துடன் போர் புரிந்தார் இனிகோ. ஆனால் எதிர்பாராத விதமாக அவரது வலதுகாலைத் தாக்கிய எதிரியின் குண்டினால் அடிபட்டு நிலத்திலே வீழ்ந்தார்.

தொடரும்......

## சிரிப்போம் சிந்திப்போம்

**பக்கத்து வீட்டு நபர் ஒருவர் நஞ்சருந்தி விட அவரை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார்கள். மறுநாள் அவரைப் பார்க்கச் சென்றபோது அங்கு வைத்தியரும் நின்றிருந்தார். வைத்தியர் அவர்களிடம் என்ன காரணத்திற்காக இவர் நஞ்சருந்தினார் என்று கேட்டபோது அங்கிருந்தவர்களில் அவரது மகள் அப்பாவின் வயிற்றில் நிறையப்புல் அதனால்தான் அவற்றை அழித்துவிட நஞ்சை அருந்தினார் என்று கூறினார்.**



**தந்தை:** சாமிநாதன் எதைக் கேட்டாலும் இல்லை என்று சொல்லச் சொன்னேன், சொன்னீயா?

**மகன்:** ஆமாம் உங்களுக்கு அறிவு இருக்கா என்று கேட்டார். நான் இல்லை என்று சொல்லி விட்டேன்.

**ஒருவர்:** ஐயா! என்னுடைய குழந்தையைக் காணவீங்க

**மற்றவர்:** குழந்தை வெள்ளையா? கறுப்பா?

**ஒருவர்:** பச்சை குழந்தை ஐயா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை..........

1ம் பக்கத் தொடர்ச்சி..

**திருகோணமலை மறைமாவட்டத்தில் மண்ணின் மைந்தனாய் முதல் ஆயனாய் இறைவனால் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள். இதில் நீங்கள் விரும்பும் எதிர்பார்ப்புக்கள், மாற்றங்கள் எவை?**

ஆயர் பணி என்பது பெருமைக்குரிய ஒரு விடயமல்ல. திருகோணமலை மறைமாவட்டம் மேலும் வளர வேண்டும். முதலில் ஆன்மீகத்தில் நாம் வளர வேண்டும். ஆன்மீகத்தில் எமக்கிருக்கும் வளர்ச்சி சமூகத்தில் பாரிய மாற்றத்தை உருவாக்கும். இதற்கு குருக்கள் துறவறத்தவர் பொதுநிலையினர் அனைவரும் அனைத்து நிலைகளிலும் புரிந்துணர்வோடு செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

**குருக்கள், அருட்சகோதர சகோதரிகளிடமிருந்து நீங்கள் (பணிகளில்) எதிர்பார்ப்பது என்ன?**

ஒரு கருத்தை அல்லது திட்டத்தை முன்வைக்கும்போது முரணான கருத்துக்கள் வரத்தான் செய்யும். ஆனால் முரண்பாடுகளையும் தனிப்பட்ட கருத்துக்களையும் கடந்து மறைமாவட்டம், எமது மக்களின் வளர்ச்சி போன்றவற்றை முதன்மையாகக் கொண்டு தம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

**எமது மறைமாவட்டத்திற்காக உங்களின் இலக்கும், நோக்கமும் யாது என கூறமுடியுமா?**

Vision: **"எல்லாருக்கும் எல்லாமானேன்."** இதுவே எனது விருதுவாக்கு.
Mission: கத்தோலிக்க விசுவாசிகளின் ஆன்மீக வளர்ச்சியில் அர்ப்பணிக்கும் அதேவேளை அந்த நிலையையும் கடந்து சாதி, மத வித்தியாசம் பாராது அமைதியும் நிறைவும் கொண்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

**புதிய திருத்தந்தையின் கருத்துக்களில் திருச்சபை மக்களோடு மக்களாய் மாறவேண்டும். நீங்கள் எவ்வாறு இக்கருத்தை செயற்படுத்த எண்ணியுள்ளீர்கள்?**

முதலாவது எமது மக்களை நாம் அறிந்திருக்க வேண்டும். ஆயன் தன் மந்தையை அறிவது அவசியம். இவ்வாறு நாம் பணிசெய்ய எமக்குத் தரப்பட்டுள்ள மக்களை அறிந்து அவர்களது தேவைகளைக் கருத்திற்கொண்டு எம்மை அர்ப்பணித்தால் மக்களை வாழ்வில் உயர்த்தலாம்.

**நமது மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் புதிய திட்டங்கள் எதையாவது எண்ணியுள்ளீர்களா?**

வரவிருக்கும் காலங்களில் குருக்களோடும், துறவறத்தவர், பொதுநிலையினரோடும் கலந்தாலோசித்து ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்துச் செயற்பட எண்ணியுள்ளேன். மறைமாவட்டத்திற்கென என்னிடம் பல திட்டங்கள் இருந்தாலும் அது **எனது** திட்டமாகச் செயல்படுத்த விரும்பவில்லை. இது **எமது** திட்டமாக குருக்கள், துறவறத்தவர் பொதுநிலையினரிடமிருந்து வரும்போது அது பயனுள்ளதாக அமையும் என்பது எனது நம்பிக்கை. இதனால் எந்த திட்டங்களையும் தற்போது அறிவிக்க விரும்பவில்லை.

**குருத்துவப் பணியை நீங்கள் தெரிந்து கொண்டீர்களா அல்லது யாராவது உந்துதலாக இருந்தார்களா?**

குருத்துவத்தை நானே தெரிந்துகொண்டேன். எனது விருப்பதையும் முடிவையும் இலகுவாக்க என் பெற்றோர், குடும்பத்தவர், உறவினர்களின் நம்பிக்கை வாழ்வும், வழிகாட்டலும், உற்சாகமும் உதவியது.

**குருத்துவப் பணி என்பது பல சவால்களைக் கடந்த பணியாகும். உங்கள் பணிவாழ்வில் நீங்கள் கண்ட சவால்களும் அதனை எவ்வாறு வெற்றி கண்டீர்கள் என்பதையும் எங்களோடு பகிர்ந்து கொள்ள முடியுமா?**

1990ல் அக்கரைப்பற்றுப் பங்கில் பணியாற்றியபோது பாரிய சவால் காத்திருந்தது. நாட்டில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாக எம்மையும் ஆபத்துக்களிலிருந்து காத்து மக்களையும் காப்பாற்ற வேண்டிய நிலை. ஆண்டவரின் ஆசீரில் துணிந்து செயல்பட்டேன். இக் காலத்தில்தான் அருட்தந்தை Herbert, SJ. அருட்தந்தை செல்வராஜா ஆகியோர் கொல்லப்பட்டார்கள். இந்தப் பயங்கரமான காலத்திலும் பணியைவிட்டு எனது பாதுகாப்பைத் தேடி நான் செல்லவில்லை. சில மாதங்கள் பங்குப் பணிமனையில் தங்காமல் வீடுகளில் தங்கியிருந்து மக்களுக்காகப் பணிசெய்தேன். இதை என்னால் மறக்க முடியாது.

**மறைக்கல்விப் பணி பற்றி உங்கள் கருத்து எத்தகையது? அது மேன்மேலும் சிறந்து வளர உங்கள் ஆலோசனைகளை எங்களுக்குத் தர முடியுமா?**

மறைக்கல்விப் பணி ஒரு மறைமாவட்டத்தின் மிகவும் முக்கியமான பணி. அது இறைவாக்குப்பணி. இறைவார்த்தையை ஒவ்வொரு தரப்பினரையும் கவரக்கூடிய வகையில் கொடுப்பது அனைவருடைய கடமை. பங்கில் ஒவ்வொரு குருவும் முதன்மை மறையாசிரியர். இப்பணியைச் செய்ய எமக்குத் தேவையான கட்டட வசதி உண்டு. அனுபவம் பெற்ற பணியாளர்கள் உள்ளனர். அர்ப்பணம் நிறைந்த மறையாசிரியர்கள் உள்ளனர். இந்த வளங்களை நாம் முறையாகப் பயன்படுத்தினால் இறைவாக்குப் பணியில் நிறைய சாதிக்கலாம்.

**உங்கள் பணிவாழ்வின் Role Model லாக இருந்தவர்கள் யாராவது உண்டா?**

1. எனது பெற்றோர்: இவர்களது விசுவாச வாழ்வு, கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்து திருத்துதல், சோர்ந்திடும் நேரத்தில் பலமாக இருந்து வழிநடத்தும் பண்பு என்பன எனக்கு உதவியாக இருந்தது.
2. எனது சிறியதாய் அருட்சகோதரி மாறி கொன்ஸ்டன்ஸ்: எனது சிறு வயது முதல் என்னில் அக்கறைகொண்டு, குருத்துவ அழைத்தலில் வழிகாட்டியாகவும் பலமாகவும் இருந்து வருபவர்.
3. எனது ஞானத்தந்தை திரு. J. M. மாட்டீன்: எனது குருத்துவ வாழ்வில் பலமாக இருந்து உற்சாகப்படுத்துபவர். எப்போதும் சிரித்த முகத்துடன் எனது நலனில் அக்கறை காட்டுபவர்.
4. அருட்தந்தை எட்வட் கொஸ்டா, அமதி: இவரைக் கண்டி தேசிய குருமடத்தில் சந்தித்தேன். ஆன்மீக வழிகாட்டியாக இன்றும் பணியாற்றி வருகிறார். பணிவு, கீழ்ப்படிவு, செப வாழ்வு, ஆன்மீகம் என்று பல விடயங்களை அவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

**உங்களது பணிவாழ்விலே பாரிய சிலுவை ஒன்றை தோள்மேல் சுமத்தியிருக்கிறது திருச்சபை. இச்சிலுவையை எவ்விதம் திருச்சபையின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவீர்கள் என்று அறிந்து கொள்ளலாமா?**

இப் பொறுப்பை ஏன் "பாரிய சிலுவை" என்று பார்க்க வேண்டும்? அழைக்கும் இறைவன் வழிகாட்டலையும், தேவையான அருளையும் தருவார் என்று உறுதியாக நம்புகிறேன். எமது மறைமாவட்டம் மேலும் வளரவேண்டுமெனும் எண்ணமும் ஆர்வமும் குருக்கள் துறவறத்தவர், பொதுநிலையினர் மத்தியில் இருக்கிறது. அதற்காகத் தமது பங்களிப்பையும் தரக்காத்திருக்கிறார்கள். இவ்வாறு இறையருளும் உடனுழைப்பாளர்களின் பங்களிப்பும் இருக்கும்போது எனது பணி சிலுவையாகத் தெரியாது.

**உங்களது குருத்துவ பணிவாழ்வில் நீங்கள் மேற்கொண்ட செயற்பாடுளில் உங்களுக்கு மனநிறைவைத் தந்த விடயம் எது?**

1. **மக்களுக்கான பணி:** எனது பங்கு, ஆன்மீகம் என்று மட்டும் இருந்துவிடாமல் தேவையேற்படும்போது உயிரையும் பொருட்படுத்தாது ஆபத்தில் இருக்கும் மக்களுக்கு உதவியது மனநிறைவைத் தந்துள்ளது.
2. **இல்லத்தரிசிப்புகள்:** ஆயித்தியமலைப் பங்கில் பணியாற்றியபோது இதை அதிகம் உணர்ந்தேன். மறைக்கல்விப் பணிகளோடு பங்கையும் பார்க்கும் பணி எனக்குத் தரப்பட்டதால் எனக்குக் கிடைத்த நேரங்களை திட்டமிட்டு குடும்ப தரிசிப்புகள் செய்தேன். இதன் மூலமாக மக்களின் கஷ்டங்களை அறிய முடிந்தது. இம்மக்களையும் நம்பிக்கையில் வழிநடத்த முடிந்தது. ஆயித்தியமலையில் பணியைத் தொடங்கிய காலத்தில் ஒரு வயது முதிர்ந்த அம்மா என்னைத் தேடி வந்து ஏன் எங்களுடைய ஊருக்கு வருவதில்லை என்று கேட்டார். அன்று முதல் வாரத்திற்கு ஒரு தடவை அங்கு சென்று அங்கிருந்த ஆறு குடும்பங்களையும் சந்தித்து பணியாற்றியது திருப்தியைத் தந்தது
3. **கல்விப்பணி:** 1999-2001 வரையான காலப்பகுதியில் உரோமையில் உயர்கல்வி கற்ற காலத்தில் சிங்கப்பூரைச் சேர்ந்த ஒரு குருவை சந்தித்தேன். நாம் இருவரும் ஒரே இல்லத்தில் தங்கி ஒரே கலாசாலைக்கு சென்றுவந்தோம். இக்காலப் பகுதியில் ஏற்பட்ட நட்பு பல நல்ல விடயங்களை சாதிக்கச் செய்தது. உயர்கல்வி முடிந்து அவர் சிங்கப்பூருக்குச் சென்று கத்தோலிக்க நன்கொடையாளர்கள் மூலமாக இலங்கையில் வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்விக்கான நிதி உதவிகளைச் செய்தார். 2004ம் ஆண்டு முதல் இப்பணி 7 மாணவர்களுடன் ஆரம்பித்து இன்று பெருமளவிலான மாணவர்கள் பயனடைகின்றார்கள். திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், தேவகிராமம், கண்டி போன்ற பகுதிகளில் வாழும் மாணவர்களும் இப்பணி மூலமாகப் பயனடைகின்றார்கள். இப்பணியும் மனநிறைவைத் தருகின்றது.

**உங்களது குடும்பம், சகோதரர்கள் பற்றிக் கூற முடியுமா?**

எனது தந்தை ஓய்வு பெற்ற நில அளவையாளர். 1993ல் காலமானார். பங்குப் பணிகளில் அதிகம் ஈடுபட்டவர். எனது தாய் பேராலயப்பங்கில் வசிக்கின்றார். நாம் 11 பிள்ளைகள். ஒருவர் சிறுவயதிலேயே இறந்துவிட்டார். எனது கடைசித் தங்கை அப்போஸ்தலிக்க கார்மேல் சபையில் சேர்ந்து அருட்சகோதரியாக தற்போது குவெய்த் (Kuwait) நாட்டில் பணியாற்றுகிறார்.

**-நன்றி-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மண்ணில் மலர்ந்த முதல் ஆயர் அதிமேதகு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை





குருத்துவம் ஓர் அழைத்தல்
குருத்துவம் இறைவனின் கொடை
குருத்துவம் ஓர் ஆன்மீக தியாக வாழ்வு
குருத்துவம் ஓர் பயணம் ஒரு யாத்திரை

இந்த யாத்திரைப் பயணத்தின் பாதை சில சந்தர்ப்பங்களில் நேரான பாதையாகவும் இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் கற்களும் முட்களும் நிறைந்த கடினமான பாதையாகவும் இருக்கலாம். இயேசுவைச் சுவைத்தவர்களும், இயேசுவிடம் சரணடைந்தவர்களும், இயேசுவிடம் தம்மை அர்ப்பணித்தவர்களும் இப்பயணத்தில் ஆனந்தம் அடைவர். இயேசுவை மையப்படுத்தி இதயத்தில் சாந்தமும், தாழ்ச்சியுமுள்ளவராக குருத்துவப் பயணத்தைப் பயணித்தமையால் இன்று அருட்பணி நோயல் இம்மானுவல் அடிகளார் ஆயராக உயர்த்தப்பட்டுள்ளார்.

திருகோணமலை மறைமாவட்டத்தில் பெரியகடைப் பகுதியில் திரு. ஜோக்கிம் இம்மானுவேலுக்கும், திருமதி டொனேற்றா மேசி இம்மானுவேலுக்கும் நான்காவது பிள்ளையாக அவதரித்தார் கிறிஸ்ரியன் நோயல் இம்மனுவேல். இவரது தந்தையார் நிலஅளவையாளராக இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்தார். 1993ம் ஆண்டில் இவர் காலமானார். ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகைக்கு 5 சகோதரர்களும், 4 சகோதரிகளும் இருக்கின்றனர். ஒருவர் காலமாகி விட்டார். இவரது கடைசி சகோதரியான அருட்சகோதரி தர்ஷினி (தற்போது குவைத் நாட்டில்) கார்மேல் துறவற சபையில் இணைந்து இறைத் தொண்டாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

ஆயர் நோயல் இம்மனுவேல் ஆண்டகை தமது ஆரம்பக் கல்வியை திருகோணமலை தூய மரியாள் கல்லூரியில் பயின்று, பின்னர் தந்தையாரின் இடமாற்றம் காரணமாக புத்தளம் தூய மரியாள் கல்லூரியில் இரண்டு வருடங்கள் பயின்று, பின்னர் திருகோணமலை தூய சூசையப்பர் கல்லூரியில் சேர்ந்து உயர் தர வகுப்பில் கல்வி பயின்றார். க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் ஆகிய வகுப்புக்களில் சித்தியடைந்தார்.

1975ஆம் ஆண்டில் திருகோணமலை சிறிய குருமடத்தில் சேர்வதற்கு எண்ணம் கொண்டார். அக்கால கட்டத்தில் திருகோணமலை தூய மரியாள் பேராலயத்தில் அருட்பணி G. E. L வம்பேக் அடிகளார் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். திருகோணமலை சிறிய குருமடத்தில் அருட்பணி சந்திரா பெர்னாண்டோ அடிகளார் இயக்குனராக கடமையாற்றிக் கொண்டிருந்தார். அருட்பணி G. E. L வம்பேக் அடிகளாரின் வழிகாட்டலில் 1975ம் ஆண்டில் திருகோணமலை சிறிய குருமடம் சென்ற போது குருமடத்தில் அருட்பணி சந்திரா பெர்னாண்டோ அடிகளார் அவரை வரவேற்று சிறிய குருமடத்தில் இணைத்துக் கொண்டார்.

1978ம் ஆண்டில் மெய்யியல் துறையைப் பயில்வதற்காகக் கண்டி தேசிய குருமடம் சென்றார். 1981-1982 ஆம் ஆண்டில் இடைநிலைப் பயிற்சி பெற்று இறையியல் கற்பதற்காக மீண்டும் கண்டி தேசிய குருமடம் சென்று பின் 1983ம் ஆண்டில் இந்தியாவின் திருச்சியில் அமைந்துள்ள தூய பவுல் குருமடம் சென்று இறையியல் கல்வியை நிறைவு செய்தார். இதே வேளை 1985ம் ஆண்டில் திருத்தொண்டர் பட்டம் பெற்றார்.

21. 5. 1986ஆம் ஆண்டில் தூய மரியாள் பேராலயத்தில் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின் 1986ம் ஆண்டில் மட்டக்களப்புத் தூய மரியாள் இணைப் பேராலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக தனது குருத்துவ வாழ்வை ஆரம்பித்தார். 1988ம் ஆண்டில் மட்டக்களப்பு இருதயபுரத்திலும், 1989 ம் ஆண்டில் அக்கரைப்பற்றிலும் பங்குத்தந்தையாகக் கடமையாற்றினார். 1993-1999 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு மறைமாவட்ட விவிலிய இயக்குனராகவும், மறைக்கல்வி இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார். இதே வேளை 1995-1999 காலப்பகுதியில் ஆயித்தியமலை தூய சதாசகாய ஆலயத்தின் பங்குத்தந்தையயாகவும் பணியாற்றியுள்ளார்.

1999ம் ஆண்டு தொடக்கம் 2001ம் ஆண்டு வரை இத்தாலியில் அமைந்துள்ள உரோம் நகரம் சென்று STL (ஒழுக்கவியல்) போன்ற உயர் கல்வியும் பெற்று வந்தார்.

2001-2011 காலப்பகுதியில் கண்டி தேசிய குருமடத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். 2008-2010 காலப்பகுதியில் மெய்யியல் பீடாதிபதியாகவும், 2009-2010 காலப்பகுதியல் மெய்யியல் பீட இயக்குனராகவும் 2010-2011 காலப்பகுதியில் இறையியல் பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

இதே கால கட்டத்தில் அவர் வெளியிட்ட வெளியீடுகள் பற்றியும் குறிப்பிட வேண்டியது அவசியமாகும் 2008ம் ஆண்டில் "தவக்காலத்தில் இவர்களோடு" என்னும் நூலும், 2009ல் "ஒப்புரவின் ஊடாக சமாதானம்" எனும் நூலையும் 2010-2011 காலப்பகுதியில் "தாகம்" என்னும் பெயரில் நாளாந்த சிந்தனைகள் அடங்கிய காலாண்டு நூல் 28 வெளியீடுகள் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தனைக்கும் மத்தியில் 1988இல் பெங்ளூரில் நடைபெற்ற மறைக்கல்வி கருத்தரங்கிலும் 1996இல் இந்தியாவில் நடைபெற்ற ஆசியா கருத்தரங்கிலும், 2014இல் இத்தாலியில் நடைபெற்ற குருத்துவ பயிற்றுவிப்பாளர்களுக்கான கருத்தரங்குகளையும் பங்குபற்றியதுடன் உள்நாட்டில் நடைபெற்ற கருத்தரங்குகளிலும் பங்கு பற்றியுள்ளார்.

மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராகவும், கண்டி, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளையும் நடாத்தியுள்ளார். யாழ் மறைமாவட்ட குருக்களுக்கான சிறப்புக் கருத்தரங்கிலும் பங்களிப்பு செய்ததுடன், கொழும்பு அக்குவினாஸ் கல்லூரி அருட்சகோதரிகளுக்கு ஒழுக்கவியல் விரிவுரைகளையும் நடாத்தியுள்ளார்.

அயராத இப்பணிகளுக்கு மத்தியிலும் தான் கற்ற கல்லூரியையும் மறக்காமல் தூய சூசையப்பர் கல்லூரி பழைய மாணவர் சங்க கௌரவ பொதுச் செயலாளராக 2012ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கடமையாற்றி வருகிறார். அத்துடன் திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியத்தின் (TTDE) தலைவராக 2015ம் ஆண்டு மாசி மாதம் முதல் இன்று வரை கடமையாற்றிவருகிறார்.

ஆயர் நோயல் இம்மானுவேல் ஆண்டகை சிறுவயதிலிருந்தே அமைதியான சுபாவம் உடையவர் மிக அண்மையில் நான் மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்கு அவருடன் பயணித்துக் கொண்டிருந்தேன். அந்த வாகனத்தில் அவருடன் நானும் சாரதியும் மட்டுமே பயணித்தோம். மூன்று மணி பயணத்தின் போது மூன்று முறைதான் என்னுடன் பேசினார். அந்த அளவு அமைதியாகவே எப்போதும் இருக்கும் சுபாவம் உடையவர். இவர் குருவாக வரக் காரணம் என்னவென்று சாந்தமே அணிகலனாகப் பூண்ட மங்கையர் திலகமான அவரது தாயாரிடம் கேட்டேன். "எனது செபம் தான் காரணம்" என்று சுருக்கமாகப் பதில் கூறினார். தாயைப்போல பிள்ளை உண்மைதான் ஆனால் காரியத்தில் கண்ணாயிருப்பவர் அவர்.

அந்த அன்புத்தாயின் செப மன்றாட்டு இன்று அவரை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் நிலைக்கு உயர்த்தியுள்ளது என்றால் மிகையாகாது. இப்பெருமை அவரது தாயாருக்கும், சகோதர சகோதரிகளுக்கும், உறவினர்களுக்கும் மட்டும் அல்ல திருகோணமலை மறைமாவட்ட அனைத்து மக்களுக்கும் கிழக்கு இலங்கை அனைத்து மக்களுக்கும், ஏன்? இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்குமே பெருமை தருவதாகும்.

திருகோணமலை மறைமாவட்ட பேராலயப் பங்கில் உருவான முதலாவது குருவானவரும் இவரே. திருகோணமலை மண்ணில் மலர்ந்த முதலாவது ஆயரும் இவரே என்பதில் திருகோணமலை மக்கள் என்றும் பெருமைப்படலாம்.

அதிமேதகு கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களை திருகோணமலை சகல மக்கள் சார்பாக வாழ்த்துவதோடு அவரது பணி சிறக்க பிரார்திப்போம்.

திரு. ஜோ. நோமன் பல்தஸார்
செயலாளர்
மேய்ப்புப்பணிச்சபை
தூயமரியாள் பேராலயம்
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்றுப் பங்கின் பொன்விழா சிறப்பு நிகழ்வுகள்

திருமதி சகாய மேரி அன்ரனி தாஸ்
பாலையூற்று

பாலையூற்று தூய லூர்து அன்னைத் திருத்தலமானது தனிப்பங்காகி 50 வருட பொன்விழா நிறைவை (1965 - 2015) 31.05.2015 அன்று கொண்டாடியது அன்றைய நாளில் சிறப்பம்சங்களாக இடம் பெற்றவை:

- 23.05.2015 அன்று 22 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதலும், 33 பிள்ளைகளுக்கு திவ்விய நற்கருணையும் ஆயரினால் வழங்கப்பட்டது.
- S.V.P சபையினரால் 50வது பொன் விழாவை முன்னிட்டு 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.
- 30.05.2015 அன்று மாலை ஆராதனையில் கெபியில் அமைந்துள்ள வரலாற்றுக் கிணறு அருட்பணி சீ.றோ.ஜெயரட்ணம் அடிகளாரால் ஆசீர்வதிக்கப்பட்டு நோயாளர்கள் பயன்படுத்த ஏற்பாடும் செய்யப்பட்டது. ஆராதனையில் காணாமற் போனோருக்காக விஷேட செபமும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.
- 31.05.2015 ஆயர் அதி. வந் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையின் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மகிழ்ச்சியின் அடையாளமாக 50 பலூன்கள் மறையாசிரியர்களினால் பறக்கவிடப்பட்டதோடு, புறாக்களும் பறக்கவிடப்பட்டன. அதேவேளை அருட்பணி S. மதுராங்கன் குரூஸ் அடிகளாரின் **"மன்னா"** எனும் இறுவட்டும் வெளியிடப்பட்டது.
- அன்று ஜூபிலி ஞாபகார்த்த சின்னங்களாக **T-shirt, cap, key tag, sticker** போன்றவையும் விற்பனை செய்யப்பட்டன.
- 31ம் திகதி மாலை 6 மணிக்கு ஆயரின் தலைமையில் மாபெரும் கலை நிகழ்ச்சி ஆயர் L.R. அன்ரனி அரங்கில் கிட்டத்தட்ட 1500க்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.
- புதிதாக (ஓகன்)இசை வாத்தியம் பழகிய பிள்ளைகளின் அரங்கேற்றம் நடைபெற்றது.
- எமது திருத்தலத்திற்கான புதிய வலையமைப்பு our lady of lourde shrine palaiyoothu.web.com எனும் பெயரில் திறக்கப்பட்டது.
- **"விசுவாசப் பாதை"** எனும் சிறப்பு மலர் வெளியிடப்பட்டது.
- பாலையூற்று மண்ணில் உருவாகிய குருக்கள், துறவறத்தோரின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## மறைமாவட்டத்தின் ..........

1ம் பக்கத் தொடர்ச்சி....

**தேசிய குருமடம்:** 2001 - 2011 விரிவுரையாளர், ஒழுக்கவியல்
2008 - 2010 மெய்யியல் பீடாதிபதி
2009 - 2010 இயக்குனர், மெய்யியல் பீடம்
2010 - 2011 இறையியல் பீடாதிபதி

**வெளியீடுகள்:**
2010 - 2011 "தாகம்" - நாளாந்த கிறிஸ்தவ சிந்தனைகள் அடங்கிய காலாண்டு நூல் (மொத்தமாக 28 வெளியீடுகள் )
2008 "தவக்காலத்தில் இவர்களோடு" i தவக்கால சிந்தனைகள்,
2009 "ஒப்புரவின் ஊடாக சமாதானம்" - தவக்கால சிந்தனைகள்,

**பங்கேற்ற கருத்தரங்குகள்**
1988 விவிலிய கருத்தரங்கு - பெங்களூர், இந்தியா
1993 கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி, இராகமை,
1994 மறைக்கல்வி, பெங்களூர், இந்தியா
1995 ஆசிபா, கண்டி
1996 ஆசிபா, இந்தியா
2004 குருத்துவ பயிற்றுவிப்பாளர்களுக்கான கருத்தரங்கு, இத்தாலி
2013 ஆசிபா, இராகமை
2015 "Appreciative Inquiry' Hungwella

**பங்களிப்புகள்:**
- 2004 மனசாட்சி - ஒழுக்கவியல் பற்றிய கருத்தரங்கு, தேசிய குருமடம், கண்டி
- ஒழுக்கவியல் - விரிவுரைகள் - இளம் அருட்சகோதரிகளுக்கு, அக்குவினாஸ் கல்லூரி, கொழும்பு - 2006 முதல் இன்று வரை
- பகுதிநேர விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு
- வருடாந்த தியானம், திருக்குடும்ப கன்னியர் சபை பயிலுனர்கள்
- வருடாந்த தியானம், நல்லாயன் சபைக் கன்னியர்கள்
- மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் - கண்டி, பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டங்கள்
- 2012 திருப்பாடல்கள் பற்றிய சிறப்பு வகுப்புகள் - மட்டக்களப்பு
- தூய மரியாள் கல்லூரி மாணவிகளுக்கான கருத்தரங்கு, திருகோணமலை
- 2014மாதாந்த தியான உரை - தேசிய குருமடம், கண்டி
- 2014சிறப்புக் கருத்தரங்கு - யாழ் மறைமாவட்ட குருக்கள்
- சித்திரை 2012 முதல் இன்றுவரைகௌரவ பொதுச் செயலாளர் - பழைய மாணவர் சங்கம், புனித சூசையப்பர்கல்லூரி, திருகோணமலை
- மாசி 2015 முதல் இன்றுவரை)தலைவர் - திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியம் TTDF

## கவிதை

M. அடலினா
புனித மரியாள் கல்லூரி

நம்மை எல்லாம் இரட்சிக்க
தம் உயிரை பலியாக்கின ~ மாபரனார்
கிறிஸ்து பிறந்த நன் நாளாம் ~ மார்கழி இருபத்தைந்தாம்
திகதியில் திருமலை மண்ணில் அன்புத்தாய்
ஈன்றெடுத்த தவப் புதல்வன் நீரல்லவோ

சின்னஞ்சிறு வயது முதல்
நற்பழக்க வழக்கங்களுடன் வளர்ந்தவும்
கொஞ்சம் சுட்டிப்பையனாகவும் திகழ்ந்தீர் உம் வீட்டில்
அதே சமயம் கெட்டிக்காரனாக பெயர் பெற்றீர் பாடசாலையில்

காலம் வேகமாக உருண்டோட
கிறிஸ்தவத்தின் மீது நீர் கொண்ட
ஆறாக் காதலினால் ~ இறை பணிக்கே
உம்மை அர்ப்பணிக்கத் தயாரானீர்

அன்பே உலகம் என தெரிந்தும்
ஆண்டவரின் சேவையிலே தாம் பணிந்தும்
இன்பம் தனை துறந்தும் ~ அன்று
அடியெடுத்து வைத்தீர் குருத்துவப் பயிற்சி பெற

குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட நாள் தொடக்கம்
உம் பணி செய்யத் தவறவில்லை பணிமேல் பணிகள் செய்து
பற்பல பதவி உயர்வுகளைப் பெற்று ~ இறுதியாக இன்று
எம் திருமலை மண்ணின் ஆயராக தேர்வு பெற்றீர்
வாழ்க வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றோம்

இந்நேரம் உம்மை ஈன்றெடுத்த தாய்க்கு
நன்றி தெரிவிக்க வேண்டும் உம்மை பெற்றெடுத்ததால்
அவருக்கு மட்டும் பெருமை அல்ல எம் திருமலை
மண்ணே பெருமை கொள்கின்றது

மனித மாண்பை நோக்கிய உம் பயணத்தில்
மனது போதும் மாந்தர் நீர் புனிதமான உறவைப் பேணி
பிணி இல்லாது வாழ்க வென்றும் உங்களின் பணிகள்
என்றும் சிறக்கவே உங்களை வாழ்த்தி நிற்கின்றோம்

## வாயார வாழ்த்துகின்றோம்

**புதிய ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்களை.**

திருத்தூதரின் வாரிசாக திருமலை மறைமாவட்ட ஆயராக
திருமலை மண்ணின் மைந்தரான நீர்பெற்ற அற்புத அழைப்பை
தித்திப்புடன் எத்திக்கும் எடுத்துச் செல்லும் கருவியாகி - உம்
திறமைகளூடாக பலபணிகளையும் பகிர்ந்திட வாயார வாழ்த்துகின்றோம்

கற்பு ஏழ்மை கீழ்ப்படிதலைக் கரிசனையுடன் கடைப்பிடித்த நீர்
கடமைகளைக் கண்ணியமுடன் செய்து இறையன்பிலும் பிறரன்பிலும்
காலத்தைக் கழித்து சீடத்துவம் முழுமையடைய சிலுவைதனைச் சுமந்து
களங்கமற்ற கலிலேயப்பணி புரிந்திட வாயார வாழ்த்துகின்றோம்

விண்ணகத் தந்தையின் விருப்பத்தை விருப்புடன் நிறைவேற்றி
மண்ணகத்தில் விண்ணகத்தை நிலைநாட்டும் நீதிமானாகி
மாறிவரும் உலகிற்கேற்ப புதுப்படைப்புக்களைப் புனைந்திட
மனமகிழ்வுடன் மண்ணின் மக்கள் நாம் மனதார வாழ்த்துகின்றோம்

மகிழ்ந்திருங்கள் மகிழ்வூட்டுங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துங்கள் என்பதை
மனதிலேற்று ஒதுக்கி ஓரங்கப்பட்டோர் வாழ்வில் ஒளியாகி
மனித நேயத்துக்காக மனித உரிமைகளுக்காக உழைக்கும் உத்தமனாகி
மக்களுக்கென்று வாழும் மாமனிதராக வாழ்ந்திட வாயார வாழ்த்துகின்றேன்.

திருமதி ம. ஜெயவதனி (ஆசிரியர்)
செல்வநாயகபுரம்

## என் வாழ்வில் புதிய ஆயர் பற்றி சுவைத்தவை..

அந்தோனிப்பிள்ளை குடும்பம், உவர்மலை.

திருகோணமலை நகராட்சி மன்றத்தின் முன்னைய உபதலைவராகத் தெரிவாகி இப்பகுதி மக்கள் மனதை என்றும் கவர்ந்த திரு. ஜோக்கிம் இம்மானுவேல் ஐயா அவர்களது மகன் அருட்பணி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் அவர்கள் திருகோணமலை மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டும் நிகழ்வு எதிர்வரும் 2015.07.25ம் தகதி தி/ தூய சூசையப்பர் கல்லூரி முன்றலில் நடைபெறவுள்ளது.

தந்தையைப் போல் சிரித்த முகத்துடன் எல்லோருடனும் சகஜமாகப் பழகும் சுபாவம் கொண்ட அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்கள் எமது திருமலை மண்ணின் மைந்தன், மட்டக்களப்புப் பகுதியில் கூடுதலான சேவைகளைப் புரிந்தார். கண்டி தேசிய குருமடத்தில் மெய்யியல், இறையியல் பீடாதிபதியாக இருந்து அநேக குருமட மாணவர்க்கு வழிகாட்டியாகவும் இருந்தது மட்டுமல்லாமல் எத்தனையோ கிறிஸ்தவ சிந்தனைகள் அடங்கிய வெளியீடுகள் வெளியிட்டு, ஏன் இலங்கையிலும், வெளிநாடுகளிலும் நடந்தேறிய விவிலிய, மறைக்கல்வி கருத்தரங்குகளில் பங்கேற்றும், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளராகவும், பங்குகளிலும், மறைமாவட்டத்திலுமுள்ள அநேக சபைகள், பாடசாலை மாணவர்க்கு, குருமட மாணவர்கள் மட்டிலும் அநேக கருத்தரங்குகளை நடத்தி அனைத்து மக்கள் மனதைக் கவர்ந்தவரும் தி/தூய சூசையப்பர் கல்லூரியின் மதிப்பார்ந்த செயலாளராகத் தெரிவான நாளில் இருந்தே கல்லூரி அதிபருடன் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்குப் பாடுபட்டு அபிவிருத்திப் பணிகளிலும் பங்காற்றிக் கொண்டிருக்கிறார்.

மேலும் கலவரத்தில் சேதமாக்கப்பட்ட வெல்வேரியில் உள்ள தூய சந்தியாகப்பர் ஆலயக் காணியைப் பொறுப்பேற்ற பின் அதற்கு முன்னோடியாக அங்கு இடைத்தங்கலுக்காக வரும் மக்களது வழிபாட்டிற்கு சிறு மண்டபம் அமைத்து பரிபாலித்தமையும், 2011ம் ஆண்டு முதல் ஆயரது பிரதிநிதியாக இருந்து பெற்ற அனுபவமும், அதன் சேவைகளும் இலைமறை காய் போன்றுள்ளது. எமது அருட்பணி நோயல் இம்மானுவேல் அவர்களது ஆயராக திருநிலைப்படுத்தவிருக்கும் நிகழ்வு 2015. 07. 25ம் திகதி நடை பெறவுள்ளதை நினைத்து ஆனந்தமடைகிறோம். அதற்கு எமது அனைத்து மக்களது ஆசீருடன் உங்கள் பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி - 11
## தூய யோவான் நற்செய்தி
## அதிகாரம் 14 - 18

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும்.

1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு 200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 11. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 07. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | | | | | உ | | | | வ |
| வா | | ■ | கு | ■ | | ■ | ந | இ | ■ |
| | | அ | | ■ | | | | | |
| உ | | | | து | | | | | |
| | | | | | | | | | |
| | அ | | | | | | | | |
| | | | | | அ | | | | |
| போ | | ■ | | | ■ | பா | | | |
| | வே | ■ | ■ | ப | | | | | |
| ■ | இ | | | | | ஆ | | | எ |

1. வ.......யும் உண்......யும் 2. எழு......திரு......கள்
3. ந......பர்களா........ இரு.......பீரக......... 4. து.........யா.......ர்
5. வேத....... அடை......றார் 6. அண்........ந்து 7. வா........ உறை.......ல் போடு 8. குளி..... காய்.....து
9. இவ்வு........க ஆ........சி 10. அழுவீ........க.........
11. பணி........ளர் 12. பாது.......த்தே........

பெயர் ..................................................

முகவரி ..................................................

பங்கு ..................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 09
## தூய யோவான் நற்செய்தி
## அதி 05 - 08

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இ | றை | ம | க | னி | ன் | கு | ர | லை | ■ |
| ■ | ■ | ர் | வ | ழு | தெ | த் | ர் | யி | உ |
| கூ | ■ | ஐ | ம் | ப | து | வ | ய | து | ■ |
| டை | ■ | ம் | ன | த | சே | த | த் | ரு | வி |
| க | ஆ | பி | ர | கா | ம் | ■ | ப | இ | ம் |
| ளி | ■ | ம் | லே | ச | ரு | எ | ட | யே | க |
| ல் | ப | ன் | னி | ர | ண் | டு | கு | சு | தா |
| ■ | டி | ட் | பெ | ப் | கை | க் | ணி | கா | ■ |
| வி | ண் | ண | க | த் | தி | லி | ரு | ந் | து |
| ■ | இ | ரு | க் | கி | ற | வ | ர் | நா | னே |

1. இறைமகனின் குரலை 2. ஐம்பது வயது 3. படகு
4. உயிர்த்தெழுவர் 5. தாகம் 6. பன்னிரண்டு கூடைகளில்
7. விண்ணகத்திலிருந்து 8. இருக்கிறவர் நானே
9. ஆபிரகாம் 10. விருத்தசேதனம் 11. இயேசு
12. எருசலேம் 13. காணிக்கைப்பெட்டி

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும்.**

### பரிசுக்குரியவர்கள்:-

**1ம் பரிசு 500/=**
செல்வி. G. பிரேமினி
அந்தோனியார் பாடசாலை
மூதூர்

பங்குபற்றியோர் - 50 பேர்
சரியானவிடையளித்தோர் - 30

**2ம் பரிசு 300/=**
மேரி றெஷானி ரெட்ணராஜா
29/12 இலிங்கநகர்
திருகோணமலை

**3ம் பரிசு 200/=**
வேஜின் டி குரூஸ்
இல 36A காந்திநகர்
அன்புவழிபுரம்

### பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வி. தே. ஆன் நியோமி - பேராலயம்
2. செல்வி. ரமேஸ் கிறிஸ்மா - இலிங்கநகர்
3. ஜே. புளோரீடா - பேராலயம்
4. இ. ஜெசானியா - பேராலயம்
5. P. ஜெக்குலின் பிரியா - கன்னியா
6. ம. தர்ஷிக்கா - பேராலயம்
7. அ. சருனியா - இறைஇரக்கம்
8. R. றொசிற்றா - இலிங்கநகர்
9. ஜொனத்தன் F.E - பேராலயம்
10. L. டனுஸ்ரிகன் - இறைஇரக்கம்
11. ஆன் நதுஷிகா - பேராலயம்
12. G. கிஷானி - இறைஇரக்கம்
13. டே. மெருஷன் பிள்ளை - உவர்மலை
14. L.S பியுரா - பேராலயம்
15. அ. பிளைக்சன் - நிலாவெளி
16. S. நிலானி அனிற்றா - சாம்பள்தீவு
17. M. மரியாள் - கன்னியா
18. M. லக்ஷன் - குவாடலூப்பே
19. R. டிலுக்ஸ்ராஜ் - செல்வநாயகபுரம்
20. R. ரஜனி எட்வின் - உவர்மலை
21. சை. ஷெரின் - பேராலயம்
22. R. நிரோஷா - மூதூர்
23. ச.டே வோறன் பிள்ளை - உவர்மலை
24. ரெ. மே அபிலாஷினி - மூதூர்
25. ச. மிதுசன் ~ பாலையூற்று
26. தே. சமில்டன் ~ நிலாவெளி
27. பா. ரன்சியா ஜொனத்தன் ~ சாம்பல்தீவு

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 18
## யோசுவா 1 ~ 12
## அதிகாரங்கள்

1. அழிவிற்குரியவற்றிலிருந்து சிலவற்றைக் கவர்ந்து கொண்டவன் யார்?
விடை..................................................
2. எரிக்கோவில் யோசுவா முன் தோன்றியது யார்?
விடை..................................................
3. இஸ்ராயேலர் அனைவரின் பார்வையில் உன்னை உயர்த்தத் தொடங்குகிறேன் என ஆண்டவர் யோசுவாவிடம் எப்போது கூறினார்?
விடை..................................................
4. "கில்கால்" என்றால் எபிரேய மொழியில் என்ன?
விடை..................................................
5. "ஆக்கோர்" பள்ளத்தாக்கு என்று அழைக்கப்படும் இடத்தை எபிரேயத்தில் என்னவென்று கூறுகின்றனர்?
விடை..................................................
6. ஆயி நகரைக் கைப்பற்றும் போது யோசுவா எத்தனை போர் வீரர்களைத் தேர்ந்தெடுத்தார்?
விடை..................................................
7. மோசே கட்டளையிட்ட எல்லாவற்றினின்றும் இஸ்ரயேல் சபை முன் யோசுவா............... எதுவுமில்லை?
8. யாபின் இஸ்ரயேலருடன் போரிட எங்கே பாளையம் இறங்கினார்?
விடை..................................................
9. யோர்தானிலிருந்து கொண்டு வந்த பன்னிரு கற்களையும் யோசுவா எங்கே நாட்டினார்?
விடை..................................................
10. யோசுவா மற்றும் இஸ்ரயேலரால் தோற்கடிக்கப்பட்ட மன்னர்கள் எத்தனை பேர்?
விடை..................................................

பெயர் ..................................................

முகவரி ..................................................

பங்கு ..................................................

அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 31. 07. 2015

## ஹாய் குட்டீஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 16
## இணைசட்ட நூல் (13~125 அதிகாரங்கள்)
## விடைகள்

1. ஏழாம் ஆண்டு (15:01)
2. உன் கடவுளாகிய ஆண்டவருக்கு (14:23)
3. ஆசி (15:10)
4. 2 அல்லது 3 (19:15)
5. ஆட்டு மயிரும் நூலும் (22:11)
6. [illegible] (24:15)
7. [illegible] (25:04)
8. இஸ்ரயேலர் (21:21)
9. உன் இனத்தவரிடம் (23:19-20)
10. அமலேக்கின் (25:19)

**பங்குபற்றியோர்: 46 பேர்**

**சரியான விடையளிததோர்: 17 பேர்**

**பங்குபற்றிய அனைவருக்கும் பராட்டுக்களும் நன்றிகளும்**

### பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/=**
செல்வி. எல். ரக்ஷனா
இல.07, உவர்மலை,
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
செல்வி. அ. மேரி அகல்யா,
சந்தை வீதி,
மூதூர் ~ 7.

**3ம் பரிசு 200/=**
செல்வி. ரெ. மே. அபிலாசினி,
மூதூர் ~ 7.
திருகோணமலை.



### பாராட்டுக்குரியவர்கள்

1. செல்வி. ஜெசானியா இம்மானுவேல் பேராலயம்
2. செல்வி. டொ. ரொ. பியுலா பேராலயம்
3. செல்வி. க. சுகந்தினி மூதூர்
4. செல்வி. அ. மேரிதிரேசா மூதூர்
5. செல்வி. மேரி ஜோசப்பின் மூதூர்
6. செல்வன். அ. அகிலன் மூதூர்
7. செல்வன். ம. ஜைமன் மூதூர்
8. செல்வன் ஜெசூரன் இம்மானுவேல் பேராலயம்
9. செல்வி. ச. மேரி லின்ரா மூதூர்
10. செல்வன். க. அசோக் குமார் மூதூர்
11. செல்வி. தே. ஆன்றியா பேராலயம்
12. செல்வி. அ. செல்ரின் மூதூர்
13. செல்வி. ம. தர்ஷிக்கா பேராலயம்
14. செல்வன் ச. அஜித்கரன் மூதூர்

**குறிப்பு:** இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.

## மறைக்கல்வி கற்போம் ~ 08

01. திருகோணமலை மறைமாவட்டத்திற்கு வருகை தந்த முதல் பிரான்சிஸ்கன் (கப்புச்சின்) சபை குருக்கள் யார்?
**அருட்பணி அலெக்ஸ் செல்லையா, அருட்பணி ஆரோக்கியசாமி**

02. திருகோணமலை மறைமாவட்டத்தின் முதல் ஆயர் யார்?
**அதி வண. அருட்பணி கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை**

03. தனி மனிதன் தன்னையே திருத்த வேண்டும் என வாழ்ந்து காட்டிய புனிதர் யார்?
**தூய லொயலா இஞ்ஞாசியார்**

04. சுதேச குருக்கள் தினம் எப்போது?
**யூலை 26**

05. யூலை 16 அன்று திருச்சபையானது எந்த சபையினர் விழாவை கொண்டாடுகின்றது?
**அப்போஸ்தலிக்க கார்மேல் சபை**

06. ஆயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா அல்லது நியமிக்கப்படுகின்றார்களா? எவ்வாறு?
**ஆயர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் எவ்வாறெனில் திருத்தந்தையின் தூதுவர் பேராயத்தின் தலைவரையும், ஆயர்பேரவை தலைவரையும், மறைமாவட்ட ஆலோசனை குழு உறுப்பினர்களையும் கலந்தாலோசித்த பின் அனுப்பப்படும் தகுதியான குருக்களின் ஒருவரை திருத்தந்தை நியமிக்கிறார். (தி.ச 377.3)**

07. ஆயர்களின் பணிக்காலம் எப்போது நிறைவு பெறுகின்றது ?
**75 வயது நிரம்பியபின் ஓய்வுபெறுவார்கள் உடல் நிலை மற்றும் வேறு முக்கிய காரணங்களால் தங்கள் பணியை நிறைவேற்ற இயலாதபோது பணியிலிருந்து ஓய்வுபெற கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் (தி.ச 401)**

08. இயேசுசபையின் ஸ்தாபகரும் மறைமாவட்டத்தின் பாதுகாவலருமாக இருக்கும் புனிதர் யார் ?
**தூய லொயலா இஞ்ஞாசியார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலையூற்றுப் பங்கிற்கு புதிய உதவிப் பங்குத்தந்தை



## மடுத்திருத்தலத்தில் இனங்களுக்கான நல்லிணக்க திருவிழிப்புத் தியானம்



## திருகோணமலை மறைமாவட்ட பெந்தகோஸ்தே பெருவிழா 2015





## மறைமாவட்ட விவிலிய அறிவுப் போட்டி முடிவுகள் - 2015

### தமிழ் பிரிவு

**தரம் 6-9 கீழ்ப்பிரிவு**

1ம் இடம் பாலையூற்றுப் பங்கு
2ம் இடம் சாம்பல்தீவுப் பங்கு
3ம் இடம் உவர்மலை (இலிங்கநகர்) அலஸ்தோட்டப் பங்கு

**தரம் 10,11 மத்தியப்பிரிவு**

1ம் இடம் உவர்மலை (இலிங்கநகர்)பங்கு
2ம் இடம் மூதூர்ப் பங்கு
3ம் இடம் பாலையூற்று (அன்புவழிபுரம்), சாம்பல்தீவுப் பங்கு

**தரம் 12,13 மேல்பிரிவு**

1ம் இடம் சாம்பல்தீவுப் பங்கு
2ம் இடம் செல்வநாயகபுரப் பங்கு
3ம் இடம் பேராலயப் பங்கு

### சிங்களப் பிரிவு

**தரம் 6-9 கீழ்பிரிவு**

1ம் இடம் ஆண்டாங்குளம் பங்கு
2ம் இடம் சீனன்குடாப் பங்கு
3ம் இடம் கந்தளாய்ப் பங்கு

**தரம் 10-11 மத்தியபிரிவு**

1ம் இடம் சீனன்குடாப் பங்கு

## மறைமாவட்ட விவிலிய நாடகப் போட்டி முடிவுகள் - 2015

### தமிழ்ப் பிரிவு

**தரம் 6-9 கீழ்பிரிவு**

1ம் இடம் நிலாவெளிப் பங்கு
2ம் இடம் உவர்மலைப் பங்கு
3ம் இடம் செல்வநாயகபுரப் பங்கு

**தரம் 10,11 மத்தியபிரிவு**

1ம் இடம் இருதயப்புரப் பங்கு

**தரம் 12,13 மேல்பிரிவு**

1ம் இடம் பாலையூற்றுப் பங்கு

### ஆங்கிலப் பிரிவு

**தரம் 12,13 மேல்பிரிவு**

1ம் இடம் உவர்மலைப் பங்கு

### சிங்களப் பிரிவு

**தரம் 6-9 கீழ்பிரிவு**

1ம் இடம் சீனன்குடாப் பங்கு
2ம் இடம் ஆண்டாங்குளம் பங்கு

இப் போட்டிக்கு பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும், நன்றிகளும். இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றவர்கள் தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். என்பதையும் அறியத்தருகின்றோம்.

## முதலாம் மாத நினைவாக...

பிறப்பு: 1959 + 06 + 17



இறப்பு: 2015 + 06 + 22

அமரர் அருட்பணி
சவரி விக்ரன் அவிதப்பர் அடிகளார்
(மன்னார் மறைமாவட்டம்)

மன்னார் மண்ணின் அன்புக் குருமகன்
பண்பில் உன்னதன், பரிவில் சகோதரன்
விண்ணகம் சென்றீர் எம்மைப் பிரிந்து
கண்ணீர் வடிக்கிறோம் உமக்காக இன்று

தூயவன் பணியில் தூயவனாய் வாழ்ந்து
ஆயனாய் மக்களை நேசித்தாய் எந்நாளும்
காயங்கள் ஆற்றினாய் புன்சிரிப்பாலே
நேயனாய் நெஞ்சத்தே நிறைந்து நின்றாய்

அவிதப்பர் எனும் நாமம் கொண்டவன்
பாவிகளுக் கென்றும் அடைக்கலமானவன்
தவிக்கின்றோம் உம் முகம் காணாது இன்று
புவிதனை விட்டு நீ சென்றதும் ஏனோ?

வழிகாட்டி, வாழும் நெறிகாட்டிச் சென்றாய்
விழிநீர் சொரிய நாம் நினைக்கின்றோம் உம்மை
அழியாது உம்பெயர் எம்மண்ணின் மீது
வழிகாட்டும் எமக்கு விண்ணகத்திலிருந்து.....

அருட்பணி சீ. றோ. ஜெயரெத்தினம்

## உதவும் கரங்கள்

அருட்பணி N.C அருள்வரதன்

கவிதைவரிகளை சரியாக நிரைப்படுத்துங்கள் பலரும் சரியாக நிரைப்படுத்தினால் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

1ம் பரிசு: 400/=
2ம் பரிசு: 300/=
3ம் பரிசு: 200/=



### ....இதோ கவிதை வரிகள்.....

✳ நல்லுணர்வு கொண்டவராய்
✳ வாட்டமதை இனங்கண்டு
✳ வாடி வந்த முகமதனின்
✳ கூடியதன் குறைகள் நீக்கி
✳ நாடியதை அன்புடனே
✳ கூடியே வளரும் நன்மைகளால்
✳ வாடிய நிலைகளை மாற்றி முகம்
✳ வனப்படையச் செய்வதனால்
✳ கொண்டாடுமே அதை மனங்களுமே

முடிவுத் திகதி 31. 07. 2015
அனுப்ப வேண்டிய முகவரி:-
உதவும் கரங்கள்
திருமலைத்தீபம்
297 டொக்கியாட் வீதி,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org